# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

<u>ஆணை எண்: 04/மா/2026</u>

<u>நாள்: 12.06.2026</u>

R. மயில்சாமி.
மதுரை. --- முறையீட்டு மனுதாரர்

(1) உதவி ஆணையாளர்,
மண்டலம் 2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி.

(2) உரிமையாளர்,
காணி டவர்ஸ், மதுரை. --- எதிர்மனுதாரர்கள்

மதுரை–18, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவரின் 18.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.10.2023 அன்று பெறப்பட்டு 04/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும்ஆணை வெளியிடப்படுகிறது:

## <u>ஆணை</u>

மதுரை–18, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவர் தனது 18.10.2023 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"மதுரை மாநகராட்சி மண்டலம் 2, சின்ன சொக்கிகுளம், கோகலே ரோடு நவநீத கிருஷ்ணன் கோவில் அருகில் உள்ள வணிக வளாகமான "காணி" டவர்ஸ் என்ற பெயரில் உள்ள கட்டிடம் நான்கு மாடிகளை கொண்ட கட்டிடம் அனுமதிக்கு மாறாக கூடுதலாக அரசு விதிகளை மீறி கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இவ்வணிக வளாக கட்டிட கட்டடத்திற்கு வாகனம் நிறுவத்துவதற்கு (Parking spaces) இடம் விடாமல் கட்டப்பட்டுள்ளதால் வணிக வளாகத்திற்கு வரும் வாடிக்கையாளர்களின் இரண்டு சக்கர வாசனங்கள் மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் ரோட்டில் நிறுத்துவதினால் வாகன போக்குவரத்து நெரிசல் எற்பட்டு விபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது. மேலும், காணி டவர்ஸ் வணிக வளாக கட்டிடத்திற்கு நான்குபுறமும் இடைவெளி இடம் (Set back spaces) விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடத்திற்கு அவசரகால வழிவிடாமல் (Emergency Exit) கட்டடம் கட்டப்பட்டுள்ளதால் விபத்து காலங்களில் வாடிக்கையாளர்கள் வெளியேறி உயிர் தப்பிப்பதற்கு வழிவிடாமல் கட்டப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால் தமிழ்நாடு பொதுகட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965, பிரிவு 2(8)–ன்படி வருவாய்துறையினரிடமும் மற்ற உரிய துறைகளிடம் உரிய

அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு வரும் "காணி" டவர்ஸ் வணிக வளாக கட்டடத்தின் புகார் மனுவை 03.10.2023 தேதியில் பதிவு தபாலில் (RT475885765IN) அனுப்பி இருந்தும் நடவடிக்கை எடுக்காமல் கண்டும் காணமல் மெத்தனமாகவும் அலட்சியமாகவும் செயல்பட்டு வரும் மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) அலுவலகத்தில் பணிபுரியும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிக பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

மேற்படி "காணி" டவர்ஸ் கட்டிடம் அனுமதிக்கு மாறாகவும் வாகனம் நிறுத்துவதற்கு (Parking spaces) இடம் விடாமலும் கட்டிடத்திற்கு நான்குபுறமும் இடைவெளி இடம் (Set back) விடாமலும் அவசர கால வழிவிடாமல் சட்ட விரோதமாக கட்டப்பட்ட "காணி" டவர்ஸ் கட்டிடத்தின் மீது அரசாணை எண் 07, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 10.01.2023ன்படியும், நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 21724/2016/BA2 நாள் 03.01.2017–ன் உத்தரவின்படியும் மற்றும் அரசாணை எண் (Ms) 195 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 05.11.2022–ன்படி விதி மீறல் கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971–ன் பிரிவுகள் 56(1) மற்றும் 57ன் உடன்படிக்கப்பட்ட பிரிவு 85ன் கீழ் stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் Lock and Seal and demolition வழங்கி மற்றும் விரைவான நடவடிக்கை எடுக்க உத்திரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிக பணிவன்புடனும், தாழ்மையுடனும் வேண்டிக் கொள்கிறேன்.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 27.12.2023 நாளிட்ட கடிதம் மற்றும் 21.01.2026 நாளிட்ட அறிவிப்பு ஆகியவற்றின் மூலம் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் முதல் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம்–2–ன் உதவி ஆணையாளர் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான மதுரை, காணி டவர்ஸ் உரிமையாளர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.04.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், முதல் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையர் தனது 02.04.2026 நாளிட்ட கடிதத்தில், மதுரை மாநகராட்சியில் சட்டமன்ற தேர்தல் 2026 தேர்தல் பணிக்கான அத்தியாவசிய பணிகள் பார்க்கப்பட்டு வருவதால் 07.04.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராக இயலாத நிலை உள்ளது எனவும், சட்டமன்ற தேர்தல் பணிகள் முடிவடைந்த பின்னர் மாற்று தேதியினை தெரிவிக்கும் பட்சத்தில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முறையீட்டு மனு தொடர்பான விசாரணையில் கலந்து கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது.

5. மேலும் மனுதாரரும் தன்னுடைய 06.04.2026 நாளிட்ட மின்னஞ்சலில்,, தனது தாய் மாமா இறைவனடி சேர்ந்து விட்டதால் 07.04.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராக முடியாததால், மற்றொரு தேதிக்கு மாற்றம் செய்து தருமாறு கோரியுள்ளார்.

6. எனவே, மனுதாரரின் புகார் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் முதல் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம்–2–ன் உதவி ஆணையாளர் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான மதுரை, காணி டவர்ஸ் உரிமையாளர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற

நடுவத்தில் 20.05.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

7. இந்நிலையில், மதுரை மாநகராட்சி மண்டலம்–2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளர் தனது 19.05.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"மனுதாரர் திரு.R.மயில்சாமி என்பவர் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2, வார்டு எண்:31, கதவு எண்.1யு, நகரளவு எண்.288/1, 2, சின்ன சொக்கிகுளம் கோகலே சாலையில் கானி டவர்ஸ் என்ற வணிக உபயோக கட்டிடமானது அனுமதிக்கு மாறுதலாகவும், கூடுதலாகவும் கட்டியுள்ள கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க கோரப்பட்டது.

இவ்வணிக உபயோக கட்டிடத்திற்கு மாநகராட்சியில் அனுமதி பெற்ற வரைபடம் மற்றும் ஆவணங்களை 7 தினங்களுக்குள் சமர்ப்பிக்கும்படி தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022–விதி எண்:3–ன் கீழ் 06.03.2026–ல் கட்டிட உரிமையாளர் Dr.A.வசந்தாதேவி அவர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து கட்டிட உரிமையாளரிடம் இருந்து 13.03.2026 அன்று வழங்கப்பட்ட விண்ணப்பத்தில் மதுரை மாநகராட்சியில் கட்டிட அனுமதி பெற்ற வரைபட நகல், கிரைய ஆவணம், நகரளவு, மற்றும் சொத்துவரி ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார். அதனை தொடர்ந்து மனுதாரருக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதிக்குட்பட்ட கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022 விதி 4–ன்கீழ் அக்கட்டிடத்தினை ஆய்வு செய்வதற்கான அறிவிப்பு 27.03.2026–ல் வழங்கப்பட்டது. அதில் தெரிவித்துள்ளபடி 02.04.2026 அன்று ஆய்வு பணி மேற்கொள்ளப்பட்டது. அதில் மதுரை மாநகராட்சியில் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு மூலம் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்கள் வணிக உபயோகத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி கட்டிட அனுமதி 06.07.2006–ல் வழங்கப்பட்டுள்ளது.

- தரைத்தளம் – 1312 ச.அடி (or) 122 ச.மீ
- முதல் தளம் – 1312 ச.அடி (or) 122 ச.மீ
- இரண்டாம் தளம் – 1312 ச.அடி (or) 122 ச.மீ
- மூன்றாம் தளம் – 1312 ச.அடி (or) 122 ச.மீ
- ஹெட்ரூம் – 234 ச.அடி (or) 21.74 ச.மீ

மேற்கண்ட கட்டிட அனுமதிக்கு மாறுதலாக 4–ம் தளம் அனுமதியின்றி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால் மனுதாரருக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022 விதி 5(a)-ன் கீழ் 15.05.2026 அறிவிப்பில் 30 தினங்களில் கட்டிடத்தை முந்தைய நிலைக்கு மாற்றும்படியும் கட்டிடத்தின் பயன்பாட்டை நிறுத்தும்படியும் தவறினால் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 (2A)–ன் கீழ் கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள காலஅவகாசம் முடிவடைந்த பின்னர் இக்கட்டிடத்தின் மீது சட்டப்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது."

8. மனுதாரர் 20.05.2026 அன்று தமிழ்நாடு முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

9. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் இளநிலைப் பொறியாளர் 20.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி, மண்டலம் 2, வார்டு எண் 31, சின்னசொக்கிகுளம் கோகலே சாலையில், நகரளவு எண் 288/1, 2 கதவு எண் 1யு என்ற முகவரியில் அமைந்துள்ள காணி டவர்ஸ் என்ற வணிக உபயோக கட்டிடம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அனுமதி பெற்ற வரைபடம் மற்றும் ஆவணங்களை 7 தினங்களுக்குள் சமர்ப்பிக்கும்படி தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022, விதி 3ன் கீழ் 06.03.2026 நாளிட்ட அறிவிப்பு கட்டிட உரிமையாளர் டாக்டர் A வசந்தாதேவி அவர்களுக்கு வழங்கப்பட்டு, கட்டிட உரிமையாளர் கட்டிட அனுமதி பெற்ற வரைபட நகல், கிரைய ஆவணம், நகரளவு மற்றும் சொத்துவரி ஆவணங்களை 13.03.2026 அன்று சமர்ப்பித்துள்ளார். அதனை தொடர்ந்து தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதிக்குட்பட்ட கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022 விதி 4ன் கீழ் அக்கட்டிடத்தினை ஆய்வு மேற்கொள்ள அறிவிப்பு 27.03.2026 அன்று வழங்கப்பட்டு, 02.04.2026 அன்று ஆய்வு பணி மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு பணியில், மேற்கண்ட கட்டிடத்திற்கு நகரமைப்பு மற்றும்அபிவிருத்தி நிலைக்குழு மூலம் தரைத்தளம், மற்றும் மூன்று தளங்கள் வணிக உபயோகத்திற்கு கீழ்க்கண்டவாறு கட்டிட அனுமதி 06.07.2026 அன்று வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | கட்டிடத்தின் விவரம் | கட்டிடத்தின் அளவுகள் |
|---|---|---|
| 01 | தரைதளம் | 1312 சதுர அடி (or) 122 ச.மீ. |
| 02 | முதல் தளம் | 1312 சதுர அடி (or)122 ச.மீ |
| 03 | இரண்டாம் தளம் | 1312 சதுர அடி (or)122 ச.மீ. |
| 04 | மூன்றாம் தளம் | 1312 சதுர அடி (or)122 ச.மீ. |
| 05 | ஹெறட்ரூம் | 234 சதுர அடி (or)27.74 ச.மீ. |
| 06 | கூடுதலாக நான்காம் தளம்<br>Headroom approval | 1312 சதுர அடி<br>234 சதுர அடி |
| | மொத்தம் | 1078 கூடுதல் கட்டியது |

மேற்கண்ட கட்டிடத்தில் 4ஆம் தளம் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளதால், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022 விதி 95(a) ன் கீழ் 15.05.2026 அன்று கட்டிடத்தை முந்தைய நிலைக்கு மாற்றும்படியும், கட்டிடத்தின் பயன்பாட்டை நிறுத்தும்படியும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56(2A) ன் கீழ் கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய விசாரணையில் காணி டவர்ஸ் உரிமையாளரின் சார்பாக ஆஜராகிய வழக்கறிஞர் கானி டவர்ஸ் கட்டிடம் தொடர்பாக சென்னை தலைமைச்செயலக வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறைக்கு சீராய்வு மனு 19.05.2026 அன்று சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட சீராய்வு மனு தொடர்பாக உறுதி செய்து, அம்மனு மீது அரசிடமிருந்து பெறப்படும் உத்தரவிற்கிணங்க உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.''

10. இரண்டாம் எதிர்மனுதாரரான காணி டவர்ஸ் கட்டிடத்தின் உரிமையாளர் டாக்டர்.A.வசந்தாதேவி என்பவர் சார்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கறிஞராக பணியாற்றும் N.பாண்டிவேல்ராஜன் என்பவர் 20.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"எனது மனுதாரர் மதுரை மாநகராட்சி தல்லா குளம் வடக்கு தெரு, கதவு எண்.1A, அமைந்துள்ள காணி டவர்ஸ் கட்டிடத்தின் உரிமையாளர் ஆவார். இக்கட்டிடம் 20 வருட பழைமை வாய்ந்த கட்டிடமாகும். இக்கட்டிடத்தின் தரைத்தளத்தில் ஒரு சிறிய ஜவுளி கடையும் ஸ்டேஷனரி கடையும், மற்றும் ஜெராக்ஸ் கடையும் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இக்கட்டிடத்திற்கு மனுதாரரால் உரிய வரிகள் நிலுவை இல்லாமல் செலுத்தப்பட்டு வருகிறது. 20 வருடங்களுக்கு மேலான கட்டிடம் என்பதால் மதுரை மாநகராட்சியிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் தற்போது கண்டறிய முடியவில்லை.

இருப்பினும், விதி மீறல் இருப்பின் அதனை வரைமுறைபடுத்த சென்னை தலைமைச்செயலக வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறைக்கு மறு சீராய்வு மனு 19.05.2026 அன்று சமர்ப்பித்துள்ளேன் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.".

11. முறையீட்டு மனுதாரரின் மனு, முதல் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி, மண்டலம் 2–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் இளநிலைப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் சார்பில் ஆஜரான மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கறிஞராக பணியாற்றும் திரு. N.பாண்டிவேல்ராஜன் என்பவரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மதுரை மாநகராட்சி மண்டலம் 2, சின்ன சொக்கிகுளம், கோகலே ரோட்டில் "காணி டவர்ஸ்" என்ற பெயரில் அமைந்துள்ள நான்கு மாடி கட்டிடம் அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாலும், வாகனம் நிறுவத்துவதற்கு பார்க்கிங் வசதி இல்லாமல் உள்ளதாலும், இக்கட்டிடத்திற்கு வரும் வாடிக்கையாளர்கள் தங்களது நான்கு மற்றும் இருசக்கர வாகனங்களை சாலையில் நிறுத்தப்படுவதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதோடு, விபத்துக்களும் ஏற்படுகின்றன என்பதும், மேலும், இக்கட்டிடத்தின் நான்குபுறமும் (Set back) இடைவெளி விடாமலும், அவசர காலத்திற்கான வழி விடாமலும் விதி மீறி கட்டப்பட்டுள்ளது என்பதும், மேற்படி கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொதுகட்டடங்கள் (உரிமம்) சட்டம் 1965, பிரிவு 2(8)–ன்படி வருவாய்துறையினரிடம் அனுமதி பெறாமலும், மற்ற துறைகளிடமும் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ளது என்பதும், இவ்வாறு அனுமதிக்கு மாறாகவும், விதி மீறி, மேற்கண்ட கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால், அரசாணை எண் 07, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 10.01.2023–ன்படியும், நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம் 1971–ன்படியும், நகர் ஊரமைப்பு ஆணையரின் கடிதம் ந.க. எண் 21724/2016/BA2, நாள் 03.01.2017–ன்படியும், அக்கட்டிடத்தின் மீது நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971–ன் பிரிவு 85–ன் கீழ் stop work notice / notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக அமலாக்க நடவடிக்கையும் எடுக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனுவிலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி, மண்டலம் 2, வார்டு எண் 31, சின்னசொக்கிகுளம் கோகலே சாலையில், நகரளவு எண் 288/1, 2 கதவு எண் 1யு என்ற முகவரியில் அமைந்துள்ள காணி டவர்ஸ் என்ற வணிக உபயோக கட்டிடம் கள ஆய்வு

மேற்கொள்ளப்பட்டு அனுமதி பெற்ற வரைபடம் மற்றும் ஆவணங்களை தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022, விதி 3ன் கீழ் கட்டிட உரிமையாளருக்கு மதுரை மாநகராட்சி மண்டலம் 2–லிருந்து அறிவிப்பு வழங்கப்பட்டதன் அடிப்படையில், கட்டிட அனுமதி பெற்ற வரைபட நகல், கிரைய ஆவணம், நகரளவு மற்றும் சொத்துவரி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டது என்பதும், அக்கட்டிடத்தினை ஆய்வு மேற்கொள்ள அறிவிப்பு வழங்கப்பட்டு, கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், மேற்கண்ட கட்டிடத்திற்கு நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு மூலம் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்கள் மற்றும் ஹெட்ரூம் உட்பட வணிக உபயோகத்திற்கு வழங்கப்பட்ட கட்டிட அனுமதிக்கு மாறாக ஹெட்ரூம் தவிர்த்து கூடுதலாக 1078 சதுர அடி கொண்ட நான்காம் தளம் கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டு, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (அனுமதியற்ற கட்டுமானங்கள் அகற்றுதல்) விதிகள் 2022 விதி 95(a) ன் கீழ் கட்டிடத்தை முந்தைய நிலைக்கு மாற்றும்படியும் மற்றும் கட்டிடத்தின் பயன்பாட்டை நிறுத்தும்படியும், இல்லையெனில், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவி 56(2A) ன் கீழ் கட்டிடத்தை மூடி முத்திரையிட நடவடிக்கை எடுக்கப்படும் என கட்டிட உரிமையாளருக்கு தெரிவிக்கப்பட்டது என்பதும், 20.05.2026 அன்றைய விசாரணையில் காணி டவர்ஸ் உரிமையாளரின் சார்பாக ஆஜராகிய வழக்கறிஞர் காணி டவர்ஸ் கட்டிடம் தொடர்பாக சென்னை தலைமைச்செயலக வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறைக்கு சீராய்வு மனு 19.05.2026 அன்று சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்தார் என்பதும், மேற்கண்ட சீராய்வு மனு தொடர்பாக உறுதி செய்து, அம்மனு மீது மேற்கண்ட துறையிடமிருந்து பெறப்படும் உத்தரவிற்கிணங்க உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் இளநிலைப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

தனது மனுதாரர்திருமதி Dr. A.வசந்தாதேவி மதுரை மாநகராட்சி தல்லா குளம் வடக்கு தெரு, கதவு எண்.1A, அமைந்துள்ள காணி டவர்ஸ் கட்டிடத்தின் உரிமையாளர் என்பதும், 20 வருட பழைமை வாய்ந்த இக்கட்டிடம் என்பதும், இக்கட்டிடத்திற்கு மனுதாரரால் உரிய வரிகள் நிலுவை இல்லாமல் செலுத்தப்பட்டு வருகிறது என்பதும், 20 வருடங்களுக்கு மேலான கட்டிடம் என்பதால் மதுரை மாநகராட்சியிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் தற்போது கண்டறிய முடியவில்லை என்பதும், இருப்பினும், விதி மீறல் இருப்பின் அதனை வரன்முறைபடுத்த மறு சீராய்வு மனுவினை சென்னை, தலைமைச் செயலக வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரர் சார்பில் ஆஜரான மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கறிஞராக பணியாற்றும் திரு. N.பாண்டிவேல்ராஜன் என்பவரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி, மண்டலம் 2, வார்டு எண் 31, சின்னசொக்கிகுளம் கோகலே சாலையில், நகரளவு எண் 288/1, 2, கதவு எண் 1யு என்ற முகவரியில் அமைந்துள்ள "காணி டவர்ஸ்" என்ற வணிக உபயோக கட்டிடமானது நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு மூலம் வணிக உபயோகத்திற்கு வழங்கப்பட்ட கட்டிட அனுமதிக்கு மாறாக ஹெட்ரூம் தவிர்த்து கூடுதலாக கட்டப்பட்ட 1078 சதுர அடி கொண்ட நான்காம் தளம் தொடர்பாக கட்டிடத்தின் உரிமையாளர் டாக்டர்.A.வசந்தாதேவி என்பவர் சென்னை, தலைமைச் செயலக வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறைக்கு சீராய்வு மனு சமர்ப்பித்துள்ளதாக இரண்டாம் எதிர்மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் 20.05.2026 அன்றைய விசாரணையில் தெரிவித்ததால், மேற்கண்ட சீராய்வு மனு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதை உறுதி செய்து, அம்மனு மீது அரசிடமிருந்து பெறப்படும் உத்தரவிற்கிணங்க உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்று மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் இளநிலை பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, இரண்டாம் எதிர்மனுதாரரான "காணி டவர்ஸ்"

கட்டிட உரிமையாளர் வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறைக்கு அளித்த சீராய்வு மனுவின் மீது பெறப்படும் ஆணையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளருக்கு அறிவுறுத்துமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து, இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி,
பிளாட் எண்.5, செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி, மதுரை.

(3) உதவி ஆணையாளர்,
மண்டலம்–2 (வடக்கு),
மதுரை மாநகராட்சி, மதுரை–625 007.

(4) திருமதி Dr. A.வசந்தாதேவி,
(மதுரை காணி டவர்ஸ் உரிமையாளர்)
கதவு எண் 9 & 10, காசி நகர்,
அண்ணா நகர் வழி, பீளமேடு,
கோயம்புத்தூர்–641 004.

(5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(6) இணை இயக்குநர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை–600 032

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது// 15/6/26
செயலாளர்.
15/6/26
1/10